திரு. எம். தேவராசன் : காவிரியுடன் கங்கையை இணைக்கும் திட்டம் ஏதாவது உண்டா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அப்படியொரு யோசனை இருக்கிறது. அது விரைவில் திட்டம் ஆவதற்கான நடவடிக்கைகள் நடைபெறும் என்று நம்புகின்றோம்.

திருமதி ஜோதி வெங்கடாசலம் : தலைவர் அவர்களே, காவிரி ஆற்றின் தண்ணீரைக் கொண்டுவருவதற்கு ஏற்பாடுகள் செய்து கொண்டிருக்கும்போது, கிருஷ்ணாவிலிருந்து தண்ணீர் கொண்டு வரும் திட்டம் கைவிடப்பட்டதா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : கிருஷ்ணா தண்ணீர் பற்றி மற்றொரு கேள்வி இருக்கிறது. அந்தக் கேள்வியிலே பதிலளிக்கலாம் என்று கருதுகிறேன். இருந்தாலும், காவிரிக்காக கிருஷ்ணா கைவிடப்படவில்லை.

திரு. கு. காமாட்சி : சென்னைக்குக் குடிநீர் திட்டம் நிறைவேற்றப்படுவதுபோல, தமிழகமெங்குமுள்ள கிராமங்களுக்கு நல்ல குடிநீர்த் திட்டத்தைச் செயல்படுத்தும் முறை அரசிடம் இருக்கிறதா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அதற்காகவே குடிநீர் வாரியம் ஒன்று அமைக்கப்பட்டிருப்பது மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரியும் என்று கருதுகிறேன்.

* 345 *Q.*—THIRU N. K. PALANISWAMY : Will the Hon. the Chief Minister be pleased to state the steps taken by the Government to augment the drinking water supply in the City of Madras?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : காவிரி ஆற்றுப்பாசனப் பகுதியின் கடைக்கோடியிலுள்ள வீராணம் ஏரியிலிருந்து நீரைப் பெற்று, நாளொன்றுக்கு 4 கோடி காலன் தூய நீர் வழங்குவதன் மூலம் மாநகருக்கு நீர் வழங்குதலை மேம்படுத்தும் திட்டத்துக்கு ரூ. 21.3 கோடி மதிப்பீட்டுச் செலவுக்கும், அதனைப் பேணுவதற்காக ஆண்டொன்றுக்கு ரூ. 35.00 லட்சம் செலவுக்கும் அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது.

மேற்சொன்ன திட்டத்திற்குக் கூடுதலாக, ஏற்கெனவே கிடைக்கும் நீரளவைப் பாதுகாக்கவும், ஏற்கெனவே நீரைத் தேக்கிவைப்பதற்குள்ள தேக்கும் கொள்திறன் அளவை உயர்த்தவும், குடத்தலையாற்றுப் பள்ளத்தாக்கில் ஊற்றுநீரை எடுக்கவும், கீழ்க்கண்ட குறுகிய காலச் செயற்குறிப்புகள் அரசாலும் சென்னை மாநகராட்சியாலும் மேற்கொள்ளப்பட்டுள்ளன :

1. பூண்டியிலிருந்து தாமரைப்பாக்கத்திற்கும் அங்கிருந்து புழலேரிக்கும் திறந்த காரைப்பூச்சுக் கால்வாய் ஒன்றை அமைத்தல் ;

2. சோழவரம், புழலேரி ஆகிய ஏரிகளின் கரைகளை உயர்த்துதல்;

1971 டிசம்பர் 14]

3. நீரைத் தேக்குவதற்காக, சோழவரம், புழலேரி ஆகிய ஏரிகளைச் சேர்ந்த ஆயக்கட்டு நிலங்களைக் கையகப்படுத்துதல்.

* 346 வின.—**திரு. கே. எ. வகாப் :** மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆந்திரத்தில் உள்ள சோமசிலா அணைத்திட்டம் முடிந்தவுடன், அதிலிருந்து சென்னைக்குக் குடிநீர் கொண்டு வரும் திட்டம் ஏதும் அரசிடம் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : (அ) &(இ) கிருஷ்ணா—கோதாவரி பாசன ஆணைக்குழு அளித்த தீர்ப்பின்படி சென்னை மாநகருக்குக் குடிநீர் வழங்குவதற்காக 1,500 கோடி கனஅடி நீர் தமிழ்நாடு அரசுக்கு வழங்கப்பட்டுள்ளது. இதில் 500 கோடி கன அடி நீரை சோமசிலா நீர்த்தேக்கத்திலிருந்து தர ஆந்திர மாநில அரசும் ஒப்புக்கொண்டுள்ளது. சோமசிலா திட்டம் நிறைவேற்றப்படுவதற்கு எடுத்துக் கொள்ளப்பட்டவுடன் இதுபற்றி ஆந்திர மாநில அரசுடன் தொடர்பு மேற்கொள்ளப்படும்.

திரு. கே. எ. வகாப் : தலைவர் அவர்களே, இப்பொழுது வீராணம் ஏரிக்குக் காவிரி நீர் வருகிறது. காவிரி நீர் குறித்து நமக்கும் மைசூருக்கும் உள்ள தகராறின் காரணமாக அதனுடைய நீர் வரத்து குறையக்கூடுமோ என்று சந்தேகிக்கதக்க அளவில் இருப்பதால், சோமசிலா திட்டத்தின் மூலம் இன்னும் அதிகமான அளவில் தண்ணீரைப் பெறுவதற்கும் அதற்கு வேண்டிய திட்டங்களை மத்திய அரசையும் ஆந்திர அரசையும் நாடிப் பெற நம்முடைய அரசு முயற்சிக்குமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : வீராணம் தண்ணீர் சென்னைக்கு வருவதைப் பற்றி சந்தேகப்படத் தேவை இல்லை. இப்பொழுது மைசூருக்கும் நமக்கும் ஏற்பட்டிருக்கிற நதி நீர்ப் பிரச்சினைக்கும் இந்த வீராணம் தண்ணீரைச் சென்னைக்குப் பெறுவதற்கும் எந்தவிதமான தொடர்பும் இல்லை என்பதை நான் தெரிவித்துக் கொள்ளுகிறேன். அதையொட்டி, வீராணத் திட்டம் மூலம் வரும் தண்ணீர் மாத்திரம் போதாது; மேலும் சென்னைக்குத் தண்ணீர் வேண்டும் என்ற அந்த அடிப்படையில் கிருஷ்ணா—கோதாவரித் தண்ணீரை சென்னைக்கு நாம் பெற வேண்டியவர்களாகவும் இருக்கிறோம். ஆந்திர அரசு 500 கோடி கன அடி நீரை சோமசிலா நீர்த் தேக்கத்திலிருந்து தர ஒப்புதல் அளித்திருக்கிறது. சோமசிலா திட்டத்தை நிறைவேற்றுவதற்கு அவர்களுக்குப் பல இடையூறுகள் ஏற்பட்டுவிட்டன. குறிப்பாக, நிலங்களை ஆர்ஜிதம் செய்வதிலே பல இடையூறுகள் இருக்கின்றன. அந்தத் திட்டத்தை அவர்கள் நிறைவேற்றத் தொடங்கிவிட்டால் நாம் அவர்களோடு தொடர்பு கொண்டு நமக்குத் தேவையான தண்ணீரைப் பெற இயலும்.